ZONAL EDUCATION OFFICE – KALMUNAI
கல்விப் பொதுத் தராதப் பத்திர(சா.த)

வரலாறு - I History - I	ஒரு மணித்தியாலம் One Hour	33	T	I

கவனிக்க

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப்பத்திரத்துக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை **(x)** இடுக.
(iv) பரீட்சையில் விடை எழுதுவதற்குப் பல்தெரிவுத்தாள் வழங்கப்படும்.

01. இலங்கையில் மிகப் பழமை வாய்ந்த நூலாக விளங்குவது
(1) மகாவம்சம் (2) தீபவம்சம் (3) போதிவம்சம் (4) தாதுவம்சம்

02. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரிய தகவல்களைக் கற்றுக்கொள்வதற்கு உதவும் முக்கியத்துவம் வாய்ந்த மூலாதாரம் பின்வருவனவற்றுள் எது?
(1) வம்சக் கதைகள் (2) கல்லாயுதங்கள்
(3) கல்வெட்டுக்கள் (4) கட்டிடங்களின் சிதைவுகள்

03. இலங்கையின் முன் வரலாற்றுக்கால மனித நடத்தைகளில் அடிப்படை மாற்றம் ஏற்படுவதற்கான காரணமாக அமைந்தது
(1) இரும்புப் பாவனையின் ஆரம்பம் (2) உணவுக்காக விலங்குகளை வேட்டையாடுதல்
(3) வாழ்விடமாகக் கற்குகைளைப் பயன்படுத்தல் (4) உணவை சுட்டு உண்ணுதல்

04. பண்டைக்கால கல்வெட்டுக்களில் **'கமிக'** எனக் குறிப்பிடப்படுபவர்
(1) குடும்பத்தின் தலைவன் (2) கொத்தணிக் குளங்களின் தலைவன்
(3) கோத்திரத் தலைவன் (4) கிராமத்தின் தலைவன்

05. பாதிகாபய மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் எந்த நாட்டிலிருந்து **'மணிகள்'** கொள்வனவு செய்யப்பட்டன?
(1) உரோம் (2) சீனா (3) இந்தியா (4) கிரேக்கம்

06. இலங்கையில் முதன்முதலாகப் பாரிய அளவிலான குளங்கள் அமைக்கும் பணி எந்த மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது?
(1) சத்தாதிஸ்ஸ மன்னன் (2) வசப மன்னன்
(3) மகாசேன மன்னன் (4) தாதுசேன மன்னன்

www.ikedu.lk

07. பழங்காலத்தில் சர்வதேச வர்த்தகத்தின் மையமாக இலங்கை வளர்ச்சியடைவதற்குப் பங்களிப்புச் செய்த காரணிகளுள் முக்கியத்துவம் வாய்ந்த காரணியாக அமைவது
(1) கிழக்கு - மேற்குக் கடல் வணிகப் பாதையின் மையத்தில் அமைந்திருப்பது
(2) தென்னிந்தியாவிற்கு அண்மையில் அமைந்திருப்பது
(3) நாட்டைச் சூழ இயற்கைத் துறைமுகங்கள் அமைந்திருப்பது
(4) இந்து சமுத்திரத்தில் ஒரு தீவாகக் காணப்படுவது

08. பின்வருவனவற்றுள் எது தொடர்பாக 'கெதி-அட' எனும் வரி அறவிடப்பட்டது?
(1) தனியார் குளங்களுக்கு
(2) வீட்டுத் தோட்டங்களுக்கு
(3) நெல் வயல்களுக்கு
(4) சேனைப்பயிர்ச் செய்கைக்கு

09. எந்தத் துறைமுகத்தினூடாக வெள்ளரசு மரக்கிளை இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது?
(1) மாதித்த
(2) ஜம்புகோளப் பட்டணம்
(3) கோகண்ண
(4) கொடவாய

10. "தற்போதயை மாதுறு ஓயா நீர்த்தேக்க அணையின் மடைக்கதவை அமைப்பதற்குப் பொருத்தமான இடம் தெரிவு செய்யப்பட்டபோது அந்த இடத்தில் பண்டைக் காலத்தில் அமைக்கப்பட்டிருந்த மடைக் கதவு சிதைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது."
இதன் மூலம் நாம் விளங்கிக் கொள்ளும் மிக முக்கியத்துவம் வாய்ந்த தகவலொன்றாக அமைவது
(1) மடைக் கதவை அமைப்பதற்குத் தற்காலத்தைப் போன்ற பொருட்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.
(2) அளவீட்டு முறைகள் பண்டைக் காலத்திலும் நவீன காலத்திலும் ஒரே விதமாக அமைந்துள்ளன.
(3) பண்டைக் காலத்தில் நீர்ப்பாசன தொழில்நுட்ப அறிவு மிக உயர்வான நிலையில் காணப்பட்டுள்ளது.
(4) பண்டைக் காலத்தில் மடைக்கதவுக்கு அருகில் பழைய நீர்த்தேக்கம் ஒன்று இருந்துள்ளது.

11. பண்டைக் காலத்தில் இரும்பைப் பிரித்தெடுப்பதற்கு இயற்கையாக வீசும் காற்றினைப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் காணப்பட்டமைக்கு ஆதாரமாக விளங்கும் இரும்புச் சூளை கண்டுபிடிக்கப்பட்ட இடம்
(1) சமனல வெவ (2) பெரகல (3) அளகொல வெவ (4) அலிகல

12. முதலாம் பராக்கிரமபாகு மன்னன் தான் பிறந்த இடத்தில் அமைத்ததாக அறியப்படும் தூபி
(1) உதகனாவ தூபி
(2) அபயகிரி
(3) சூத்திகர சைத்தியம்
(4) தெமல மஹாசாய

13. பண்டைக்கால நீர்ப்பாசனத் தொழில்நுட்பவியலாளர்கள் அமுக்கத்தின் காரணமாக குளக்கட்டுக்கு ஏற்படும் ஆபத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும் நீரைப் பிரதான கால்வாய்க்கு திறந்து விடுவதற்காகவும் அமைத்தது
(1) அலைதாங்கி (2) வான்கதவு (3) மடக்கதவு (4) கலிங்கல் தொட்டி

14. பண்டைக் காலத்தில் இலங்கையில் விருத்தியடைந்த வெளிநாட்டு வர்த்தகம் நிலவியமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது,
(1) நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் குடியேற்றங்கள் பரவலடைந்தமை.
(2) குடியிருப்புக்களை இணைக்கும் வகையில் பாதைகள் அமைக்கப்பட்டமை.
(3) பிரதான நகரங்களில் வெளிநாட்டு வர்த்தக நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தமை.
(4) முக்கிய நதிகளுக்கு அருகில் துறைமுக நகரங்கள் அமைந்திருந்தமை.

15. பண்டைக் காலத்தில் **"கலந்த"** என்பதன் மூலம் அறியப்பட்டது.
(1) தூரத்தை அளப்பதற்கான அலகு
(2) நேரத்தை அளப்பதற்கான அலகு
(3) நீரை அளப்பதற்கான அலகு
(4) நிறையை அளப்பதற்கான அலகு

www.kadu.lk

LEARNEASY

KNOWLEDGE IS POWER

தமிழ் & English Medium

தரம் 01 முதல் A/L

வரையான வகுப்புக்கள்

ZOOM ஊடாக நடைபெறுகின்றன



தரம் 01 முதல் 05 வரை

- தமிழ்
- கணிதம்
- ஆங்கிலம்
- சுற்றாடல்
- நுண்ணறிவு
- வினாத்தாள் வகுப்பு
- பேச்சு ஆங்கிலம்
- பேச்சு சிங்களம்



தரம் 06 முதல் O/L வரை

- தமிழ்
- கணிதம்
- ஆங்கிலம்
- விஞ்ஞானம்
- வரலாறு
- வர்த்தகம்
- ICT
- English Literature
- தமிழ் இலக்கியநயம்
- சுகாதாரம்
- புவியியல்
- குடியியல்

76667-4945

16. பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியடைவதற்கு உடனடிக் காரணியாக விளங்குவது
(1) கலிங்கருக்கும் பாண்டியருக்குமிடையே காணப்பட்ட ஆதிக்கப்போட்டி
(2) கலிங்க மாகனுடைய படையெடுப்பு
(3) பலவீனமான மன்னர்கள் ஆட்சிக்கு வந்தமை.
(4) இராஜராஜ சோழனுடைய படையெடுப்பு

17. முதலாம் விமலதர்சூரிய மன்னன் எதிர்நோக்கிய சவால்களில் ஒன்றாக **அமையாதது**
(1) போர்த்துக்கேயரிடமிருந்து கண்டி இராசதானியைப் பாதுகாக்க நேரிட்டமை.
(2) சீதாவாக்கை இராசதானியின் செல்வாக்கிலிருந்து கண்டி இராசதானியை விடுதலை பெறச் செய்தமை.
(3) ஒல்லாந்தரிடமிருந்து கண்டி இராசதானியைப் பாதுகாக்க நேர்ந்தமை.
(4) கண்டி இராசதானியின் பொருளாதாரத்தை மேலும் விருத்தியடையச் செய்யவேண்டியிருந்தமை.

18. பின்வருவனவற்றுள் கண்டி இராசதானி ஆட்சியாளராக விளங்குபவர் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளின் சரியான விடைத்தொகுதி
A - பாரம்பரியங்களையும் வழக்காறுகளையும் முறையே கடைப்பிடித்தல்.
B - தவறு செய்வோருக்கு மரண தண்டனை விதித்தல்.
C - தலதா மாளிகையின் தந்ததாதுவின் பாதுகாவலனாக விளங்குதல்.
D - அனைத்து வழக்குகளுக்கும் தீர்ப்பு வழங்குதல்.
(1) A யும் B யும் *(2)* B யும் D யும் *(3)* A யும் C யும் *(4)* C யும் D யும்

19. 'மறுமலர்ச்சிக் காலத்தில் புதிய கடல்வழிப் பாதை கண்டுபிடிக்கப்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது' இதற்குரிய பிரதான காரணங்களைக் கொண்ட விடைத்தொகுதி
A - திசையறி கருவி, வடதுருவ நட்சத்திர கருவி என்பன கண்டுபிடிக்கப்பட்டமை.
B - உலகம் உருண்டை வடிவமானது என நிரூபிக்கப்பட்டமை.
C - மாகாண அதிகாரிகள் ஆதரவு வழங்கியமை.
D - படவரை கலையில் ஏற்பட்ட அபிவிருத்தியின் மூலம் உலகம் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொண்டமை.
(1) A, B, C *(2)* B, C, D *(3)* C, D, A *(4)* A, B, D

20. போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாண இராசதானியைக் கைப்பற்றுவதில் கவனம் செலுத்தியமைக்குரிய காரணிகளாக விளங்குபவை.
A - நாடு முழுவதிலும் வாசனைத் திரவிய வர்த்தகத்தில் ஏகபோக உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு
B - வடபகுதியில் துறைமுகமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு
C - கத்தோலிக்க சமயத்தைப் பரப்பும் நடவடிக்கைகளுக்கு யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஏற்பட்ட தடைகளை நீக்குவதற்கு
D - யாழ்ப்பாண - கண்டி ஆட்சியாளர்களுக்கிடையிலான தொடர்பைத் தடைசெய்தல்.
(1) A யும் B யும் *(2)* B யும் C யும் *(3)* C யும் D யும் *(4)* A யும் C யும்

www.ikdu.lk

⊙ **பின்வரும் கண்டுபிடிப்புக்களைக் கொண்டு *21* ஆம், *22* ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

A - பறக்கும் நூனாளி
B - பாதுகாப்பு விளக்கு
C - மெக்கடம் முறை
D - மியுல் இயந்திரம்
E - நீராவி இயந்திரம்

21. புடைவைக் கைத்தொழிலோடு தொடர்புடைய கண்டுபிடிப்புகளின் விடைத் தொகுதி
(1) A யும் C யும் *(2)* B யும் E யும் *(3)* C யும் D யும் *(4)* A யும் D யும்

22. நிலக்கரிக் கைத்தொழிலோடு தொடர்புடைய கண்டுபிடிப்புகளின் விடைத் தொகுதி
(1) A யும் C யும் *(2)* B யும் E யும் *(3)* C யும் D யும் *(4)* A யும் D யும்

23. பிரித்தானியர்கள் இலங்கையைக் கைப்பற்றுவதில் தமது கவனத்தைச் செலுத்துவதற்குப் பிரதான காரணியாக விளங்கியது
(1) இந்தியாவில் மொகலாய ஆட்சியை பலவீனமடையச் செய்ய முடியும் என்பதால்
(2) இந்தியாவைச் சுற்றியுள்ள வர்த்தக வலயத்தில் நடைபெறுகின்ற வர்த்தக நடவடிக்கைகளை நிர்வகிக்க இயலும் என்பதால்
(3) இந்து சமுத்திரத்தில் நடைபெறுகின்ற கடல் போக்குவரத்துச் செயற்பாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம் என்பதால்
(4) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு தேவையான நிலத்தைப் பெற்றுக்கொள்ள இயலும் என்பதால்

⊙ பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் J வரையிலான தகவல்களைப் பயன்படுத்தி *24* ஆம், *25* ஆம் வினாக்களுக்கு விடை தருக.

	வருடம்	பிரித்தானிய ஆளுநர்கள்	வரலாற்று நபர்கள்
A	1815	D பிறெடறிக் நோர்த்	G முத்துச்சாமி
B	1848	E ரொபட் பிரௌன்றிக்	H புரன் அப்பு
C	1803	F டொரிங்டன் பிரபு	J ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னன்

24. கண்டி இராசதானியைப் பிரித்தானியர்கள் கைப்பற்றியமையுடன் தொடர்புடைய தகவல்கள் அடங்கிய தொகுதி
(1) A, E, J *(2)* A, F, J *(3)* A, D, H *(4)* B, E, G

25. கண்டி இராசதானி கைப்பற்றப்பட்ட பின்னர் பிரித்தானியருக்கு எதிராக இடம்பெற்ற கிளர்ச்சியுடன் தொடர்புடைய தகவல்களின் விடைத்தொகுதி
(1) C, F, H *(2)* B, F, H *(3)* A, F, H *(4)* B, F, G

⊙ **பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் J வரையான தகவல்களைப் பயன்படுத்தி *26* ஆம், *27* ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

	தலைவர்கள்	வெளியீடுகள்	பாடசாலைகள்
A	ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்	D சரசவி சந்தரச	G கொழும்பு சாஹிறாக் கல்லூரி
B	ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்	E முஸ்லிம் நேசன்	H வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை
C	எம்.சீ. சித்திலெவ்வை	F உதயபானு	I கொழும்பு ஆனந்தாக் கல்லூரி

26. பௌத்த சமய மறுமலர்ச்சி இயக்கத்தோடு தொடர்புடைய சம்வங்களின் விடைத்தொகுதி
(1) A, D, G *(2)* B, D, J *(3)* C, F, J *(4)* B, F, J

www.ikedu.lk

27. இந்து சமய மறுமலர்ச்சி இயக்கத்தோடு தொடர்புடைய தகவல்களின் விடைத்தொகுதி
(1) A, E, H *(2)* C, F, G *(3)* B, E, J *(4)* A, F, H

⊙ கோல்புறூக், கமரூன் சீர்திருத்தக் குழுவினரால் முன்வைக்கப்பட்ட சில திருத்த சிபார்சுகள் கீழே தரப்பட்டுள்ளன. இத்தகவல்களைக் கொண்டு *28* ஆம், *29* ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - சட்டசபை, சட்டநிரூபண சபை ஆகியவற்றை அமைத்தல்.
B - மலைநாடு, கரையோரப் பிரதேசங்கள் ஆகியவை இணைந்த வகையில் நிர்வாக அமைப்பொன்றை அறிமுகம் செய்தல்.
C - புதிய நீதிபரிபாலன முறையொன்றை அறிமுகம் செய்தல்.
D - இராஜகாரிய கட்டாய சேவை முறையை இல்லாதொழித்தல்
E - அரசின் வர்த்தக ஏகபோகத் தன்மையை இல்லாதொழித்தல்

28. மேற்குறித்தவற்றுள் அரசியல் துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களின் விடைத்தொகுதி
(1) A யும் B யும் *(2)* A யும் D யும் *(3)* C யும் D யும் *(4)* D யும் E யும்

29. பொருளாதாரத் துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களின் விடைத்தொகுதி
(1) A யும் B யும் *(2)* C யும் D யும் *(3)* D யும் E யும் *(4)* A யும் C யும்

⊙ **இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சியால் ஏற்பட்ட விளைவுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவ்விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு *30*ஆம், *31* ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A - மத்திய வகுப்பினர் தோற்றம் பெறல்.
B - ஏற்றுமதி வர்த்தகப் பயிர்களின் அறிமுகம்
C - மேலைத்தேய வழக்காறுகள் பரவலடைதல்
D - தொழிலாளர் வர்க்கம் தோற்றம் பெறல்.
E - ஆங்கிலக் கல்வியின் அறிமுகம்.

30. பிரித்தானியர் ஆட்சியால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் இரண்டினைக் குறிக்கும் விடைத்தொகுதி
(1) A யும் B யும் *(2)* B யும் C யும் *(3)* D யும் E யும் *(4)* A யும் D யும்

31. இந்நாட்டில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்கள் இரண்டினைக் குறிக்கும் விடைத்தொகுதி
(1) A யும் C யும் *(2)* B யும் D யும் *(3)* C யும் E யும் *(4)* A யும் E யும்

⊙ **பின்வரும் *32* ஆம், *33* ஆம், *34* ஆம் வினாக்களுக்கு புள்ளிக்கோட்டில் வரவேண்டிய மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தினைக் குறிப்பிடுக.**

32. சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் பிரித்தானிய முடியின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட அலுவலர் ..... என அழைக்கப்பட்டார்.
(1) ஆளுநர் *(2)* தேசாதிபதி *(3)* பிரதமமந்திரி *(4)* சபாநாயகர்

33. 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்புக்கு அமைவாக இலங்கையின் முதலாவது பெயரளவு ஜனாதிபதியாக ..... நியமிக்கப்பட்டார்.
(1) ஜே.ஆர். ஜயவர்த்தன *(2)* வில்லியம் கோபல்லாவ
(3) ஆர். பிரேமதாச *(4)* டீ. பீ. விஜேயதுங்க

34. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமுறைக்கு அமைவாக இலங்கையில் அமைக்கப்பட்ட அதியுயர் சட்ட நிறுவனமாக ..... விளங்குகின்றது.
(1) மேன்முறையீட்டு நீதிமன்றம் *(2)* உயர் நீதிமன்றம்
(3) மாவட்ட நீதிமன்றம் *(4)* மீயுயர் நீதிமன்றம்

www.ikedu.lk

⊙ **கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடிகள் ஒவ்வொன்றையும் வாசித்து 35ஆம், 36ஆம், 37 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

A - 1. சோல்பரி அரசியல் யாப்பு 2. பாராளுமன்ற முறை
B - 1. அரசியல் முறை 2. பாராளுமன்ற ஜனநாயகம்
C - 1. சட்ட சபை 2. சட்டவாக்கம்
D - 1. அடிப்படை மனித உரிமைகள் 2. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி

35. இரண்டாவது விடயத்தின் வெற்றிக்கு முதலாவது விடயம் காரணமாக இருந்தமையைப் புலப்படுத்தும் சோடி,
(1) A (2) B (3) C (4) D

36. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் இடையே தொடர்பின்மையைக் காட்டும் சோடி
(1) A (2) B (3) C (4) D

37. இரண்டாவதின் செயற்பாட்டுக்கு முதலாவது அத்தியாவசியம் என்பதைக் காட்டும் சோடி
(1) A (2) B (3) C (4) D

⊙ **கீழே தரப்பட்டுள்ள A, B ஆகிய இரு கூற்றுக்களைக் கொண்டு 38ஆம், 39ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

A - தேயிலைக் கொள்கலன்கள் கடலில் வீசப்பட்டமை.
B - பஸ்ரீல் சிறைச்சாலை தாக்கப்பட்டமை.

38. அமெரிக்க சுதந்திரப் போருடன் தொடர்புடையது பற்றிய சரியான விடை
(1) A சரியானது, B தவறானது *(2)* A தவறானது, B சரியானது
(3) A யும் B யும் சரியானவை *(4)* A யும் B யும் தவறானவை

39. பிரான்சியப் புரட்சியுடன் தொடர்புடையது பற்றிய சரியான விடை
(1) A சரியானது, B தவறானது *(2)* A தவறானது, B சரியானது
(3) A யும் B யும் சரியானவை *(4)* A யும் B யும் தவறானவை

⊙ **கீழே தரப்பட்டுள்ள A, B ஆகிய இரு கூற்றுக்களையும் வாசித்து வினாவுக்கு விடையளிக்குக.**

A - பிரான்சிஸ் பேர்டினட் கொலை செய்யப்பட்டமை.
B - ஜேர்மனியில் ஹிட்லரின் செயற்பாடு

40. இரண்டாம் உலகமகா யுத்தத்தின் ஆரம்பத்துடன் தொடர்புடையது
(1) A சரியானது, B தவறானது *(2)* A தவறானது, B சரியானது
(3) A யும் B யும் சரியானவை *(4)* A யும் B யும் தவறானவை

www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

THE PIONEER IN ONLINE CLASSES

தரம் 11

2026

புதிய பிரிவு

பிரிவு 2

தமிழ்
வெள்ளி : 9PM
சனி : 9PM
ஞாயி : 8PM

கணிதம்
திங் : 9PM
புதன் : 9PM
ஞாயி : 9PM

விஞ்ஞானம்
சனி : 6AM
சனி : 8PM
ஞாயி : 5AM
ஞாயி : 7PM

வரலாறு
செவ் : 9PM
வியா : 9PM

வர்த்தகம்
திங் : 8PM
வியா : 8PM

ENGLISH
Mon : 7PM
Sat : 7PM

ICT
Tue : 8PM
Wed : 7PM
Fri : 8PM

zoom

76667-4945

தமிழ் இலக்கியாநயம்
புதன்
8PM - 9PM
ஞாயிறு
7PM - 8PM

English Literature
Sat
7PM - 9PM
Wed
8PM - 9PM

ZONAL EDUCATION OFFICE – KALMUNAI
கல்விப் பொதுத் தராதப் பத்திர(சா.த)

வரலாறு - II **History - II**	ஒரு மணித்தியாலம் **One Hour**	**33**	**T**	**II**

கவனிக்க

- ⊙ பகுதி **I** இன் **1** ஆம் வினா கட்டாயமானது.
- ⊙ பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **III** இலிருந்து **இரு** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ⊙ எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி I

01. (அ) வழங்கப்பட்டுள்ள **இலங்கைப் புறஉருவப் படத்தில் (i)** இன் கீழ்த் காட்டப்பட்டுள்ள **அனைத்து** வரலாற்று இடங்களையும், வழங்கப்பட்டுள்ள **பகுதி உலகப் புறஉருவப் படத்தில் (ii)** இன் கீழ்த் காட்டப்பட்டுள்ள **அனைத்து** இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

(i) வளவ கங்கை, ஜம்புகோளப் பட்டினம், பல்லவங்க, மகியங்கனை, அநுராதபுரம், சீகிரியா, கந்தளாய்க் குளம், கம்பளை, தேவ நகரம், காலி, சிலாபம், ஹோட்டன் சமவெளி. *(12 புள்ளிகள்)*

(ii) கொன்ஸ்தாந்திநோபிள், வெனிஸ், கள்ளிக் கோட்டை, பிலிப்பீன் தீவுகள், சுயெஸ் கால்வாய், சிங்கப்பூர் *(06 புள்ளிகள்)*

(ஆ) (i) கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களோடு தொடர்புடைய நபர்களை வரிசைக் கிரமமாக உமது விடைத்தாளில் எழுதுக.

A - மின்னேரித் தெய்வமென இராசரட்டை மக்களின் நன்மதிப்பைப் பெற்ற மன்னன்.

B - இரண்டாம் இராஜசிங்க மன்னனின் சிறைக் கைதியாக இருந்து கண்டி இராச்சியம் தொடர்பான நூலொன்றை எழுதிய ஆங்கிலேயன்.

C - கம்பளை இராசதானிக் காலத்தில் இலங்கையை ஆக்கிரமித்த சீன சேனாதிபதி.

D - பிரான்சியப் புரட்சிக் காலத்தில் அரசியலில் தலையிட்ட பதினாறாம் லூயி மன்னனின்மனைவி. *(04 புள்ளிகள்)*

⊙ **A, B ஆகிய உருக்களை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வரிசைக் கிரமமாக விடைத்தாளில் எழுதுக.**

(ii) 1. உரு "A" எவ்வாறு அழைக்கப்படுகிறது?
2. இங்கிருந்து ஆட்சி செய்த ஆட்சியாளன் யார்?
3. இங்கு காணப்படும் உலகப் பிரசித்தி பெற்றகலை நிர்மாணம் யாது?
4. இந்த இடத்தைப் பார்த்து இரசித்தவர்கள் தமது கருத்துக்களைப் பதித்துள்ள சுவர் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

உரு A *(04 புள்ளிகள்)*



www.moe.edu.lk

(iii) 1. உரு "B" யில் காணப்படும் நபர் யார்?
2. இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
3. இவரின் தலைமையில் *1880* ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அமைப்பு எது?
4. இவரின் தலைமையில் கொழும்பில் நிறுவப்பட்ட பாடசாலையின் பெயர் என்ன?



உரு B
(04 புள்ளிகள்)

பகுதி II

02. (i) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தனது இருப்பிடங்களைத் தெரிவு செய்தபோது கவனத்தில் கொண்ட மூன்று விடயங்களைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) (a) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தனது உணவுத் தேவைக்காக வேட்டையாடிய மிருகங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(b) அவர்கள் பயன்படுத்திய தாவர உணவு வகைகள் இரண்டினைப் பெயரிடுக.
(04 புள்ளிகள்)

(iii) இலங்கையின் முன் வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்கள் நிறுவப்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விபரிக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) வரலாற்றுக் கால இலங்கையில் விவசாயம் மேற்கொள்ளப்பட்ட முறையினைத் தெளிவுபடுத்துக.
(06 புள்ளிகள்)

03. (i) பின்வரும் ஒவ்வொரு செயற்பாட்டின் பொருட்டும் பண்டைய இலங்கையில் நடைமுறையில் இருந்த வரிமுறைகள் எவை என ஒழுங்குமுறையில் எழுதுக.

A - மன்னனின் நிலத்தில் பயிர் செய்வதற்குச் செலுத்தப்பட்ட வரி
B - கால்வாய்களில் மீன்பிடித்தலின் பொருட்டு அறவிடப்பட்ட வரி
C - குளங்களில் நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தியவர்களிடம் அறவிடப்பட்ட வரி
(03 புள்ளிகள்)

(ii) ஹோபிடிகம சந்தையின் நிர்வாகம் பற்றி விதிக்கப்பட்டிருந்த முக்கிய சட்டங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) பண்டைய இலங்கையில் கைத்தொழில்கள் நிலவியமையை **இரண்டு** உதாரணங்கள் மூலம் விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) பண்டைய மக்களின் உணவு வகைகளில் பல்வகைத் தன்மை காணப்பட்டமையை அவர்கள் பயன்படுத்திய உணவுகளின் அடிப்படையில் உதாரணங்கள் தந்து தெளிவுபடுத்துக.
(06 புள்ளிகள்)

04. (i) பின்வரும் குளங்களை நிறுவிய மன்னர்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

A - அபய வாவி
B - தீச வாவி
C - கலா வாவி *(03 புள்ளிகள்)*

www.ikeduk.lk

(ii) பண்டைய காலத்தில் நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அளவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) எமது முன்னோர் சூழலைப் பாதுகாப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக. *(05 புள்ளிகள்)*

(iv) பண்டைய கால நீர்ப்பாசனத் தொழிநுட்பத்தில் அமைக்கப்பட்ட குளங்கள், கால்வாய்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு அவற்றின் சிறப்பம்சங்களை உதாரணங்கள் **இரண்டின்** மூலம் விளக்குக. *(06 புள்ளிகள்)*

05. (i) இலங்கையின் முதலாவது நகராக்க யுகத்தைச் சேர்ந்த நிர்வாக நகரங்கள் **இரண்டினையும்,** இரண்டாம் நகராக்க யுகத்தைச் சேர்ந்த நிர்வாக நகரம் **ஒன்றினையும்** பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) முதலாவது நகராக்க யுகத்தைச் சேர்ந்த இறுதி நிர்வாக மத்திய நிலையம் வீழ்ச்சி அடைவதற்கான காரணங்கள் **இரண்டினை** எழுதுக. *(04 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் இரண்டாவது நகராக்கலின் மத்திய நிலையமாக ஈரவலயம் தெரிவு செய்யப்பட்டமைக்கான **காரணங்கள் இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனால் மேற்கொள்ளப்பட்ட அரசியல், இலக்கியப் பணிகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

06. (i) கண்டி இராசதானி மன்னர்களைச் சந்திப்பதற்கு வருகை தந்த ஆங்கிலத் தூதுவர்கள் **மூவரைக்** குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) 1803 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் மேற்கொள்ளப்பட்ட கண்டி இராசதானி மீதான ஆக்கிரமிப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் **இரண்டினை** எழுதுக. *(04 புள்ளிகள்)*

(iii) 1818 ஆம் ஆண்டு நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் **இரண்டினைத்** தெளிவுபடுத்துக. *(05 புள்ளிகள்)*

(iv) 1848 ஆம் ஆண்டு ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சிக்குக் கோல்புறூக் கமரன் சீர்திருத்தங்கள் எவ்வாறு காரணமாகியது என்பதனை **மூன்று** உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக. *(06 புள்ளிகள்)*

07. (i) கீழே A, B, C யில் தரப்பட்டுள்ள அமைப்புக்கள் நிறுவப்பட்ட யாப்பு சீர்திருத்தங்களை ஒழுங்குமுறையில் எழுதுக.
A - சட்டவாக்கக் கழகம்
B - அரச கழகம்
C - இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் *(03 புள்ளிகள்)*

(ii) டொனமூர் அரசியல் சீர்திருத்தத்திற்கு இணங்க பிரித்தானிய அரச உத்தியோகத்தர்களின் கீழிருந்த துறைகள் **இரண்டினையும்,** இலங்கை அமைச்சர்களின் கீழிருந்த துறைகள் **இரண்டினையும்** எழுதுக. *(04 புள்ளிகள்)*

(iii) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விளைவாக இந்நாட்டு சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைத் தெளிவுபடுத்துக. *(05 புள்ளிகள்)*

(iv) 1931 ஆம் ஆண்டின் பின்னர் இந்நாட்டின் நெற்பயிர்ச்செய்கையை முன்னேற்றுவதில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டினைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக. *(06 புள்ளிகள்)*

www.ikedu.lk

பகுதி III

08. (i) பிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் புரட்சிக்கு அடிப்படையாக அமைந்த **மூன்று** பிரதான கைத்தொழில்களைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(ii) பிரித்தானியாவில் ஆரம்பித்த கைத்தொழில் புரட்சி *19* ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிலும் பரவுவதற்கான காரணங்கள் **இரண்டினைத்** தருக. *(04 புள்ளிகள்)*

(iii) கைத்தொழில் புரட்சியின் விளைவாகப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை **இரண்டு** விடயங்களின் அடிப்படையில் விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) கைத்தொழில் புரட்சியின் விளைவாக
(a) அரசியல்
(b) பொருளாதாரம்
ஆகிய துறைகளில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட மாற்றங்கள் **ஒவ்வொன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. *(06 புள்ளிகள்)*

09. (i) கீழே A, B, C என்பதில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய விடைகளை ஒழுங்கு முறையில் எழுதுக.
A - சிறிய நாடுகளை ஒன்றிணைத்து ஜேர்மனியை உருவாக்கியவர்.
B - முதலாம் உலக யுத்தத்தில் தோல்வியுற்ற ஜேர்மனியைத் தண்டித்த உடன்படிக்கை
C - முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் ஜேர்மனியில் தோற்றம் பெற்ற புதிய அரசியல் முறை *(03 புள்ளிகள்)*

(ii) கீழே A, B, C, D என்பதில் கொடுக்கப்பட்டுள்ள விடயங்களுக்குப் பொருத்தமான விடைகளை ஒழுங்குமுறையில் எழுதுக.
A - 1870 ஆம் ஆண்டில் ஜேர்மனியால் பலவந்தமாக கைப்பற்றப்பட்ட பிரான்சுக்கு உரிய நிலக்கரி, இரும்புவளப் பிரதேசம்.
B - முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் சமாதானத்தைப் பேணும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட அமைப்பு.
C - அமெரிக்க ஐக்கிய நாடு இரண்டாம் உலக மகா யுத்தத்தில் இணைவதற்கான உடனடிக் காரணம்.
D - இரண்டாம் உலக மகா யுத்தத்தின் இறுதியில் ஜப்பான் சரணடையத் தீர்மானித்தமைக்கான காரணம். *(04 புள்ளிகள்)*

(iii) 'உலகில் பாரிய அழிவை ஏற்படுத்திய பயங்கர யுத்தம் இரண்டாம் உலக மகா யுத்தமாகும்' இக்கூற்றினை **இரண்டு** காரணங்களை முன்வைத்துத் தெளிவுபடுத்துக. *(05 புள்ளிகள்)*

(iv) இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உலக அரசியல் மாற்றமடைந்த விதத்தை உதாரணங்களுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

www.ikeduu.lk

English

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom

Literature

76667-4945

MONTHLY 3,000/-

Grade 10	Tue 6PM-8PM	Wed 7PM-8PM
Grade 11	Sat 7PM-9PM	Wed 8PM-9PM

By : G.Gnanalosan

COMMERCIAL BANK
Easy to Learn (Pvt) Ltd
Wellawatte
8008392295

BOC
BANKERS TO THE NATION
S.Kishokumar
Nelliyaddy Branch
86479603

PEOPLE'S BANK
S.Kishokumar
Jaffna University
162-2-001-7-0028670

eZ Cash
0766674945

விடைகள்


பத்திரம் - I

01 - 2	11 - 1	21 - 4	31 - 3
02 - 2	12 - 3	22 - 2	32 - 2
03 - 1	13 - 4	23 - 2	33 - 2
04 - 4	14 - 3	24 - 1	34 - 2
05 - 1	15 - 4	25 - 2	35 - 1
06 - 2	16 - 2	26 - 2	36 - 4
07 - 1	17 - 3	27 - 4	37 - 3
08 - 4	18 - 3	28 - 1	38 - 1
09 - 2	19 - 4	29 - 3	39 - 2
10 - 3	20 - 4	30 - 4	40 - 2

பத்திரம் - II


பகுதி - I

01. (அ) (i)



(12 புள்ளிகள்)


www.lkedu.lk



www.ikbdu.ir


பத்திரம் - II
பகுதி - I

01. (அ) (i)



(12 புள்ளிகள்)

www.ikeou.lk



www.ikeot.ik

வணிக கல்வியும் கணக்கீடும்

Call or WhatsApp : 766674945

கல்வியாண்டு 2025

தரம் 10	தரம் 11
புதன் :7PM	திங் :7PM
சனி :7PM	வியா :8PM

COMMERCIAL BANK	BOC BANKERS TO THE NATION	PEOPLE'S BANK	eZ Cash
Easy to Learn (Pvt) Ltd Wellawatte 8008392295	S.Kishokumar Nelliyaddy Branch 86479603	S.Kishokumar Jaffna University 162-2-001-7-0028670	0766674945

01. (ஆ) (i) A - மகாசேனன் C - செங்கே
B - றொபேட் நொக்ஸ் D - மாரி அண்டயனற

(ii) 1. சீகிரியாக் கோட்டை / சீகிரியா கலாபவனம் 3. சீகிரியா ஓவியம்
2. முதலாம் காசியப்பன் / காசியப்பன் 4. பளிங்குச்சுவர்

(iii) 1. கேணல் ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்
2. ஐக்கிய அமெரிக்கா நாடுகள் / நியூயோர்க்
3. பரமஞான சங்கம் / பிரம்மஞான சங்கம்
4. ஆனந்தா கல்லூரி / நாலந்தா கல்லூரி / விசாகா பெண்கள் கல்லூரி / மியூசியஸ் பெண்கள் பாடசாலை

பகுதி - II

02. (i) 1. நீர்த்தேவை / நீர் கிடைக்கும் வாய்ப்பு காணப்பட்டமை.
2. உணவுத்தேவை / உணவைப்பெறும் வாய்ப்பு காணப்பட்டமை.
3. பாதுகாப்புத் தேவை / பாதுகாப்புப்பெறும் வாய்ப்பு காணப்பட்டமை

(ii) (a) 1. காட்டுமாடு
2. மான் / மரஅணில் / கீரி / குரங்கு / கரடி / எருமை / பன்றி / உடும்பு
(b) 1. காட்டு வாழை
2. காட்டுப்பலா / காட்டுப்பாக்கு / கித்துள் விதை/ வள்ளிக்கிழங்கு

(iii) வரலாற்றுக்காலக் குடியிருப்புக்களின் பரம்பலில் புவியியற் காரணிகள் செல்வாக்குச் செலுத்தியது. உதாரணம்
1. வருடாந்த மழைவீழ்ச்சியின் அளவு 2. மண்ணின் தன்மை
3. தரைத்தோற்ற வேறுபாடு 4. இயற்கை வழங்களின் பயன்பாடு
5. நீரோடைகளும், கிராமியக் குளங்களும்

விளக்கம்

1. வரலாற்றுக்காலக் குடியிருப்புக்களின் பரம்பல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்கள் பற்றிச் சரியாக அறிந்துகொள்வதற்குத் தொல்பொருள் சான்றுகளே பெரிதும் உதவுகிறது. உதாரணம் :
   - இலங்கை முழுவதும் சிறு குளங்களின் சிதைவுகள் காணப்படுகின்றமை.
   - பெரும்பாலான குளங்கள் குளமொன்றை மையமாகக் கொண்டு அதன் அருகாமையில் அமைந்திருந்தமை.

2. - குடியேற்றங்கள் பொதுவாக இலங்கையின் உலர் வலயத்தில் அமைக்கப்பட்டிருந்தது.
   - சராசரி ஓரளவு மழைவீழ்ச்சி காணப்பட்டது. *(1000 - 1025 மி.மீ)*
   - செங்கபில நிற வளமான மண் வகை இவ்வலயத்தில் காணப்பட்டதால் குடியிருப்புக்கள் நிறுவப்பட்டது.
   - விவசாயத்துக்குத் தேவையான நீர் இரு வழிகளில் பெறப்பட்டது. கோடை காலத்தில் நதி நீரும், பருவ மழையும் பெறப்பட்டது.
   - குடியிருப்பாளர்கள் குளங்களை அமைத்து நீரைச் சேமிப்பதில் கவனம் செலுத்தினான். மேலும் நதிக்கரைகளுக்கு அப்பால் குடியிருப்புக்களை நிறுவியிருந்தனர். காரணம் வெள்ளப்பெருக்கும் அதைக்கட்டுப்படுத்துவதற்குப் போதுமான அறிவு இல்லாதிருந்தமையாகும்.

(iv) 1. வரலாற்றுக்கால மனிதரின் ஜீவனோபாயம் சேனைப்பயிர்ச் செய்கையாகும்.
2. அவர்கள் குடியிருப்புக்களுக்கு அண்மையில் காடரர்ந்த மேட்டு நிலத்தைத் தீயிட்டு அழித்து அதில் குரக்கன், மெனெரி, எள், கரையரிசி என்பவற்றை அங்கு பயிரிட்டிருந்தனர்.

www.ikedu.lk

3. இப்பயிர்கள் வரட்சிக்கு முகங்கொடுக்கக்கூடிய பயிராகக் காணப்பட்டதால் இப்பயிர்களைத் தெரிவு செய்திருந்தனர். மேலும் இப்பயிர்கள் நீர் குறைந்த மேட்டுப்பூமியில் பயிரிடக்கூடிய தாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.
4. அவர்கள் மந்தைமேய்ப்பு, மீன்பிடித்தல், ஆபரணங்கள் செய்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டும் தமது ஜீவனோபாயத்தைக் செழுமைப்படுத்தியமை அகழ்வாராட்சியின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

03. (i) A - போஜக்கபதி
B - மதர மஞ்சக்கவரி
C - தக்கபதி

(ii) 4 ம் உதய மன்னனின் ஹோபிடிகமத் தூண் கல்வெட்டில் புராதன சந்தைச் சட்டதிட்டங்கள் பற்றித் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.
1. இப் புராதன வர்த்தக நிலையத்தின் எல்லையில் வியாபாரம் செய்வோரிடமிருந்து மாத்திரம் வரி அறவிடப்படவேண்டும்.
2. வர்த்தக நகரத்தைக் கடந்து செல்வோரிடமிருந்து வரி அறவிடக்கூடாது.
3. வர்த்தக நிறுவனத்தில் பொருட்களை அதிகாரிகளிடம் காண்பிக்காது விற்போரிடமிருந்து இருமடங்கு வரி அறவிடப்படவேண்டும்.
4. வர்த்தகர்கள் அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறப்படாத தராசுகளை பயன்படுத்தப்படக் கூடாது.
5. வெற்றிலை, பாக்கு என்பன விற்கும் பொருட்டு அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டும்.
6. போயா தினங்களில் வியாபாரம் செய்வோரிடமிருந்து எண்ணெய் வரி அறவிடப்பட வேண்டும். இவ்வரிகள் மகியங்கனை விகாரையில் விளக்கு எரிவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.
7. மாடு களவாடியவனுக்கு மாட்டின் உடலில் காணப்படும் அடையாளத்தைப்போன்று சூட்டுக்கோல் வைத்தல் வேண்டும்.

(iii) பண்டைய இலங்கையில் மிகவும் முறையாக தாபன ரீதியாக பல்வகைத் தொழில்களில் சிறப்புற்று விளங்கியமை பற்றி வரலாறு கூறுகிறது.
1. உலோகக் கைத்தொழில் சிறப்புற்று விளங்கியது.
உதாரணம் :
- அன்றாட விவசாய நடவடிக்கைக்குத் தேவையான மண்வெட்டி, ஈட்டி, அரிவாள் என்பன தயாரிக்கப்பட்டிருந்தது. இத்தொழிலை மேற்கொள்வோரை கல்வெட்டுக்களில் **"கபர"** என்றும் **"கம்மாளர்கள்"** என்றும் குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து அக்கால உலோகக் கைத்தொழிலின் சிறப்பு நன்கு வெளிப்படுத்தப்படுகிறது.
- இந்த விவசாயப் பொருட்களை பட்டறைகளில் **"கொல்லர்கள்"** தயார் செய்தமை பற்றியும் வரலாறு குறிப்பிடுகிறது.

2. செம்பு (தம்பகர), வெள்ளீயம் (டின்) தந்தச் செதுக்கல் (தடிக) போன்றே கைத்தொழில்களில் சிறப்புற்று விளங்கியது.
உதாரணம் :
- புராதன பதிவேடுகளில் தங்கத்தொழிலில் ஈடுபட்டோரை **"துலாதர"** என்றும் **"பொற்கொல்லர்கள்"** என்று குறிப்பிடப்பட்டிருந்தது.
- புராதன அகழ்வுகளில் பண்டைய நகரங்களில் (மாகம, அனுராதபுர) கண்டெடுக்கப்பட்ட மாணிக்க மாலைகள், தங்க மோதிரங்கள், வெள்ளி வளையல்கள் இக்கைத்தொழிலின் மகிமையைப் பறைசார்த்துகிறது. இக்கைத்தொழில் கலைஞர்கள் **"மணிகர"** என்றும் மணிகாரர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

www.ikedu.lk

3. தந்தச் செதுக்கல் மற்றும் வனைதல் கைத்தொழில்களும் சிறப்புற்று விளங்கியது.
   உதாரணம் :
   - பண்டைய தொல்பொருட்சான்றுகள் தந்தத்தொழில் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. **"தடிக"** என்பது தந்தத்தைக் குறிக்கிறது. **"தடிக சுமண"** என்பது தந்த செதுக்கல் கலைஞரைக் குறிப்பிடுகிறது.
   - அக்காலத்தில் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட வனைதல் தொழில் காணப்பட்டது. இத்தொழிலை செய்தோரைக் கல்வெட்டில் **"கும்பகார"** என்றும் **"குபகர"** என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iv) பண்டைய மக்களின் உணவு வகைகளில் பல்வகைத்தன்மை காணப்பட்டமை பற்றி இலக்கியங்களும், தொல்பொருட்களும் சான்று பகர்கின்றன.

1. அக்கால மக்கள் தானிய வகைகளைப் பிரதான உணவாக உட்கொண்டிருந்தனர்.
   உதாரணம் :
   - நெல்லரிச்சோறு, தவிட்டரிசிச்சோறு, குரக்கன், உழுந்து, பயறு, எள், மெனெரி போன்றவைகள்.
2. அக்கால மக்கள் கிழங்கு வகைகளை உணவாக உட்கொண்டிருந்தனர்.
   உதாரணம் :
   - காட்டுக்கிழங்குகள், முட்கிழங்குகள், வற்றாளை போன்ற வகைகள்.
   - **"கீர்த்தி ஸ்ரீ மேகவண்ணனின் தோணிக்கல கல்வெட்டில்"** உழுந்து, பயறு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
3. அக்கால மக்கள் பல்வகை மரக்கறி வகைகளையும் உட்கொண்டிருந்தனர்.
   உதாரணம் :
   - பீற்கங்காய், சுண்டைக்காய், சுரக்காய், வெள்ளரிக்காய், பூசணிக்காய், முருங்கை போன்ற வகைகள், **"சர்த்தர் மரத்தினாவலியா"** என்ற நூலில் முட்கொடி வகைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
4. அக்கால மக்கள் கிராமங்களில் பசுக்கள் வளர்த்து அதிலிருந்து பல பயனுள்ள பொருட்களைப் பெற்றிருந்தனர்.
   உதாரணம் :
   - கறவைப்பசுக்களை வளர்த்து அதிலிருந்து பால், தயிர், வெண்ணை போன்றவற்றை உணவில் பயன்படுத்தினர். கறவைப் பசுக்களை **"கிரிகெரி"** என்றும் **"தீகிரி"** என்றும் அழைத்தனர்.
   - கி.மு. 9 ஆம் நூற்றாண்டுகளில் கிராமங்களில் பசுக்கள் வளர்க்கப்பட்டமைக்குச் சான்றுகள் காணப்படுகிறது.
5. அக்கால மக்கள் பல்வகை, பல்சுவை கஞ்சி தயாரித்து உண்டதாக சான்றுகள் கூறுகிறது.
   உதாரணம் :
   - **"யாவாகு"** என்பது நோயாளர் கஞ்சி எனப்பட்டது. ஒரு பங்கு அரிசியுடன் ஆறு பங்கு நீர் சேர்த்து தயாரிக்கப்பட்டது.
   - **"எம்புல்ஹபர்பு"** அல்லது **"எம்புல் கெந்த"** என்பது மருத்துவ மூலிகை கொண்ட கஞ்சி வகையாகும்.
   - சுவையூட்டப்பட்ட கஞ்சி தயாரிக்கப்பட்டது. நீர் சேர்க்காத பாலில் தயாரித்த பாலில் தேன், நெய் என்பன சேர்த்து ஆற்றிய பின் அதனுள் தோடம்பழச்சாற்றை சேர்த்துத் தயாரிக்கப்பட்டது.
   - இலக்கியத்தில் கஞ்சிக்கு **"அடிஹய்புகாடி"** என்ற சொற்பதம் பாவிக்கப்பட்டுள்ளது. **"சர்த்தர் மரத்தினாவலிய"** என்ற நூலில் சுவையூட்டப்பட்ட கஞ்சி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

www.ikeou.lk

6. அக்கால மக்கள் உணவைச் சுவையூட்டும் வகையில் பல்வகைப் பழங்களையும், புளி வகைகளையும், இலை வகைகளையும் பயன்படுத்தினர்.
   உதாரணம் :
   - உணவைச் சுவையூட்டுவதற்காக எலுமிச்சைப்பழம் நாரத்தை, தோடம் பழங்களைப் பயன்படுத்தினர்.
   - உணவுக்கு சுவையூட்டுவதற்காக கறிவேற்பிலையைப் **(களுபோநுய)** பயன்படுத்தினர்.
   - மரக்கறி வகைகளை சுவைபட உண்பதற்காக பொரியல், சுண்டல், குழம்பு, மேலான குழம்பு, கெட்டியான கறி **(நியம்பலாவ)** புளிக்கறி போன்ற செயற்பாட்டில் ஈடுபட்டு உணவுண்டதாக வரலாறு கூறுகிறது.

04. (i) A - பண்டுகாபயன்
    B - தேவநம்பியதீசன்
    C - தாதுசேனன்

    (ii) A - கவ்வ
    B - யொதுன
    C - உசக

    (iii) எமது முன்னோர் சூழல் மாசடைதலால் ஏற்படும் பிரச்சினைகளை நன்கு அறிந்திருந்தனர்.
    - மரம் செடிகளை அழிப்பதன் மூலம் நீர் பற்றாக்குறை ஏற்படும் என்பதை அறிந்திருந்தனர்.
    - மண் அரிப்பினால் மண் வளம் குன்றி விளைச்சல் குறையும் என்பதை அறிந்திருந்தனர்.
    - எனவே சூழலைப் பாதுகாப்பதற்கு அக்கால அரசர்கள் முறையான கட்டுப்பாடான அரச சட்டங்களை உருவாக்கி, அதை நடைமுறைப்படுத்தியிருந்ததை புராதனக் கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகிறது.
      உதாரணம் :
      1. இயற்கையில் காணப்படும் உயிரினங்கள், மரஞ்செடிகள், நீர்நிலைகள், மண் வளம் என்பவற்றைப் பாதுகாக்கச் சட்டங்களை அமுல் செய்திருந்தனர்.
      2. உரிய காலத்தில் அறுவடை செய்யத்தவறும் நபர்களுக்கு **"ஐந்து கலங்"** அபராதம் செலுத்துமாறு கூறப்பட்டமை தொடர்பான சட்டமொன்று கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த **தூண் கல்வெட்டில்** குறிப்பிடப்பட்டுள்ளது.

         மேற்சொன்ன சட்டதிட்டம் மழைக்காலத்தில் அறுவடை செய்வதன் மூலம் மண்ணரிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காகவும், மண் வளத்தைப் பாதுகாப்பதற்காகவும் இச்சட்டம் அமுல் செய்யப்பட்டது.
      3. 3 ஆம் உதய மன்னன் **"இயற்கை மரங்களைப் பாதுகாக்கும் சட்டத்தை"** அமுல் செய்தான்.
      4. **5 ஆம் காசியப்ப** மன்னன் இயற்கை மரங்களைப் பாதுகாக்கும் அறிவுறுத்தல்களை அரச ஆணையாகப் பிரகடணம் செய்தான்.
      மேற்சொன்ன மன்னர்களின் சட்டதிட்டங்கள் இயற்கை மரங்களை அழிக்கப்படுவதைத் தடுப்பதற்காகவும், சூழல் சமநிலையைப் பேணுவதற்காகவும் அமுல் செய்யப்பட்டது என்பதிலிருந்து எமது முன்னோர் எவ்வளவு தூரம் சூழலை நேசித்தார்கள் என்பது புலனாகிறது.

    (iv) எமது பண்டைய தொழில்நுட்பவியலாளர்கள் அரிதாகக் கிடைக்கும் இயற்கை மழை நீரைப் பாதுகாக்கச் சேமித்து வைப்பதற்காக குளங்களையும், கால்வாய்களையும் அமைத்தனர்.
    1. இவர்கள் குளத்தை அமைக்கும் போது பல நீர்ப்பாசனத் தொழிநுட்பங்களைக் கவனத்தில் எடுத்து குளங்களை அமைத்தனர்.
       உதாரணம் :
       - குளத்தை பொருத்தமான இடத்தில் அமைத்தமை.
       - இயற்கையான கற்பாறைகளை அத்திவாரமாகக் கொண்ட குளக்கட்டை அமைத்தமை.
       - பாரிய நீர்ப்பாசனத்தை தாங்கி நிற்கும் வகையில் குளக்கட்டை சக்திவாய்ந்ததாக

www.ikedu.lk

அமைத்தமை.

- கருங்கற்களைக் கொண்டு பொருத்தமான இடத்தில் வான்கதவு எனப்படும் சுருங்கையையும், மடைக்கதவு எனப்படும் கலிங்கலையும் அமைத்தனர்.
- எமது முன்னோர் அமைத்த கலிங்கல் அண்மையில் மாதுறு ஓயா நீர்த்தேக்கக்கட்டு மானப்பணியின் போது கண்டுபிடிக்கப்பட்டது. இது பண்டையக் காலத்தின் **"நீர்ப்பாசன தொழில்நுட்ப அறிவுமேம்பாடான நிலையில்"** காணப்பட்டதை அடையாளப்படுத்துகிறது
- புராதன குளங்களில் நீரை விநியோகிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கலிங்கத் தொட்டியுடன் தொடர்பான கருங்கல்லிலான தூண் அமைக்கப்பட்டிருந்தது. இதனை முன்னோர் "தண்ணீர் விளக்கு" என அழைத்தனர்.
- இந்த கற்தூணை அசைப்பதன் மூலம் கலிங்கல் தொட்டியிலுள்ள தண்ணீர் கால்வாய்க்கு விடப்பட்டது. பாரிய குளங்களின் கலிங்கல் தொட்டிகளில் அவ்வாறான பல கற்தூண்கள் பயன்படுத்தப்பட்டதாக கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறது.
- எமது புராதன தொழில்நுட்பவியலாளர்கள் இரு எச்சக்குன்றுகளின் பாறைச்சுவடுகளைப் பயன்படுத்தி குளக்கட்டைத் நிர்மாணித்தனர்.
- மேலும் குளத்தை அமைக்கும் போது அவர்கள் பொருத்தமான இடத்தில் அலைதாங்கி, மடைக்கதவு, கலிங்கல்தொட்டி, வான்கதவு, உள்வான்கதவு, ஈரக்கலிங்கல், உயர்கலிங்கல், சிறு குளங்கள், கலிங்கல்கட்டு என்பனவற்றை அமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

2. புராதன கால நீர்ப்பாசனவியல் தொழில்நுட்பவியலாளர்கள் கால்வாய்களை அமைப்பதற்குப் பயன்படுத்திய தொழில்நுட்பங்களாவன:

1. கால்வாய்களில் நீரின் வேகத்தைக் குறைப்பதற்காக கருங்கல்லினால் அத்திவாரம் அமைத்தல் மற்றும் சிறிய கற்றூண்களை கால்வாயின் உட்பகுதிகளில் இடையிடையே பொருத்துதல்.
   உதாரணம் : எலகரக்கால்வாய்.
2. கால்வாயின் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக கருங்கல்லினால் வான்கதவை அமைத்தல்.
3. சுரங்கவழி நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் அமைத்தல்.
   உதாரணம் :
   திசாவாவி நீரை ரன்மசு உயன பூங்காவிற்கும், குட்டம் பொய்கைக்கும் வினியோகித்தல்.
4. நுண் அளவீட்டு மென்சாய்வுத் தொழில்நுட்பத்தை அமைத்தல்.
   உதாரணம் :
   தாதுசேன மன்னன் கலாவாவியிலிருந்து திசாவாவிக்கு 87 கிலோமீற்றர் தூரத்திற்கு **யோதஅல** எனப்படும் ஐயகங்கைக் கால்வாயை அமைத்து அதை ஒரு கிலோமீற்றருக்கு 95 மில்லிமீற்றர் சாய்வில் அமைத்திருந்தமை. இதன் காரணமாக இக்கால்வாயை **"புதுமையான கால்வாய்"** என அழைக்கப்படுகிறது.
5. வரட்சிக்காலங்களில் குளங்களின் நீர்மட்டத்தைப் பேணுவதற்கு ஆற்று நீரை கால்வாயினூடாக பல குளங்களுக்கு வழங்கப்பட்டது.
   உதாரணம் :
   எலகர கால்வாய் மூலம் அம்பன் கங்கையிலிருந்து (ஆகாச கங்கை) நீர் மின்னேரியா, கவுடுள்ளு, கிரித்தலை, கந்தளாய் ஆகிய குளங்களுக்கு வழங்கப்பட்டமை.

05. (i) 1. அனுராதபுரம்
2. பொலன்னறுவை
3. தம்பதெனியா / யாப்பகுவ / குருனாகல / கம்பளை / கோட்டை

(ii) 1. பலவீனமான அரசர்களின் வருகை
2. மௌரிய இலம்பகர்ண வம்சங்களுக்கிடையிலான சிம்மாசன உரிமைப் போராட்டம்.
3. தென்னிந்தியப் படையெடுப்புக்களும் முற்றுகையும்.
4. சோழர்களின் ஆக்கிரமிப்பும், முற்றுகையும்.

www.ikeduk.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

ICT

Grade 6 to O/L

zoom



76667-4945

BY : A.Nivethika

Grade 6	Grade 7	Grade 8
Wed:6PM	Fri:7PM	Wed:8PM
Fri:6PM	Sun:7PM	Sat:8PM

Grade 9	Grade 10	Grade 11
Mon:9PM	Mon:7PM	Tue:8PM
Thur:9PM	Thur:7PM	Wed:7PM
	Sun:8PM	Fri:8PM

(iii) 1. சோழரின் ஆக்கிரமிப்பினால் நிர்மூலமாக்கப்பட்ட இராஜரட்டையை மீளவும் கட்டியெழுப்ப முடியாமையும் அதைப் பாதுகாக்க முடியாமற்போனமை.

2. தோட்டப் பயிர்ச்செய்கைளக்கு உகந்த இயற்கை மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றமையால் ஈரவலயத்தை தமது மத்திய நிலையமாகத் தெரிவு செய்தனர்.
மேலும் ஈரவலயத்தில் பெறுமதிமிக்க கறுவா காணப்பட்டது. அது சர்வதேச வர்த்தகத்தில் பெறுமதிமிக்க பயிராகவும் இலாபத்தைச் சம்பாதிக்கும் பயிராக இருந்ததனால் அம்மக்கள் குடிபெயர்ந்தனர்.

3. ஈரவலயத்தில் தென்னை முக்கிய தோட்டப்பயிராகக் காணப்பட்டதால் அப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு இலாபமீட்டுவதற்காக அவ்வலயத்திற்குக் குடிபெயர்ந்தனர்.

4. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகச் செயற்பாட்டுக்குச் சாதகமான இயற்கைத் துறைமுகங்களும் படகுத்துறைகளும் ஈரவலயத்தில் காணப்பட்டதால் அவ்வலயத்திற்குக் குடிபெயர்ந்தனர்.

(iv) 1. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் அரசியல் பணிகள்

- பொலன்னறுவை இராச்சியத்தை *40* வருடங்கள் கொடுங்கோலாட்சி நடாத்திய *(1215 - 1255)* கலிங்க **"மாகனை"** விரட்டியடித்து நாட்டை விடுவித்து அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தியமை.
- கி.பி. *1247*, *1260* ஆகிய இரு ஆண்டுகளில் படையெடுத்த ஜாவா நாட்டுச் **சந்திரபானுவை** பாண்டிய மன்னனின் உதவியுடன் விரட்டியடித்து நாட்டில் மீண்டும் உறுதிப்பாட்டை ஏற்படுத்தியமை.

2. இலக்கியப் பணிகள்

- இம்மன்னன் கவிசிலுமின, விசுத்திமார்க்கசன்னிய ஆகிய நூல்களையும், தம்பதெனிய கதிகாவத என்ற பிக்குமார் ஒழுக்க நெறிக்கோவையையும் எழுதியமை.

06. (i) A - யோன்பைபஸ்
B - ஹியுபொயிற்
C - றொபேட் அன்றூஸ்

(ii) 1. ஆங்கிலேயருக்கு மலையகம் பற்றிய பூரண அறிவின்மை.

2. யுத்த காலத்தின் பருவப்பெயர்ச்சி மழையின் தாக்கத்தால் படையணிகள் மத்தியில் மலேரியா நோய் மற்றும் துன்பங்கள் ஏற்பட்டமை.

3. கண்டிக்குப் பொறுப்பான படைக்கு **மேஜர் டேவியின்** திறமையீனம்

4. மலையக மன்னனின் யுத்ததந்திரோபாயங்களும், **கொரில்லா முறை யுத்தியும்** பிரயோகிக்கப்பட்டமை.

5. கண்டி மக்களின் விசுவாசம், சிங்களவரின் ஒற்றுமை, கண்டியில் இயற்கையரண் போன்ற காரணிகளையும் குறிப்பிடலாம்.

(iii) 1. பொதுமக்கள், பிக்குகள், பிரதானிகள் சார்பாக கண்டி ஒப்பந்தத்தில் கொல்லப்பட்ட சட்ட ஏற்பாடுகளை ஆங்கிலேயர் வேண்டுமென்று மீறியமை.

- குறிப்பாக பிரதானிகளின் வருமான வழிகள் அனைத்தும் முடக்கப்பட்டது. அவர்களின் நிலை கீழ்நிலைக்குக் சென்றது. அவர்களின் ஒட்டுமொத்தமான விரக்தியின் வெடிப்புத்தான் இப்போராட்டமாகும்.
- மேலும் புத்தபிக்குகள் புறக்கணிக்கப்பட்டமை, பௌத்த சமயத்துக்குரிய மரியாதை, கௌரவம் வழங்கப்படாமையும் இப்போராட்டத்திற்கான காரணமாகும்.

2. கண்டி மக்களின் சுதேச மொழி, பழக்கவழக்கங்கள் பற்றிய அறிவில்லாத பிரித்தானிய ஆட்சியாளர்களால் மக்கள் விரக்தியடைந்தமையும் புரட்சிக்கான மற்றுமொரு காரணமாகும்.

3. மேலும் தங்கள் கண்களால் காணமுடியாத இலண்டன் அரசனுக்கு பணிந்துநடப்பதென்பது கண்டி மக்களால் முடியாத காரணமாக இருந்தமை.

www.ikeduk.lk

4. ஊவா - வெல்லசப் பிரதேசத்திற்கு ஹஜ்ஜிமரிக்கார் என்ற முஸ்லிம் முகாந்திரம் நியமிக்கப்பட்டமை புரட்சிக்கான உடனடிக் காரணமாக அமைகிறது.

(iv) 1833 இன் கோல்புறூக் கமரன் சீர்திருத்தங்களின் விளைவுகள் ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சிக்குக் காரணமாக அமைந்திருந்தது.

உதாரணம் :

1. ஆங்கிலேயரின் கோப்பித்தோட்டங்களின் செயற்பாட்டுக்காக மலையக மக்களின் காணிகள் கோல்புறூக்கின் காணி விற்கும் கொள்கையினூடாகவும் ஆள்பதி ஸ்ரூவேட் மெக்கன்சியின் தரிசு நிலச்சட்டத்தினாலும் சுவீகரிக்கப்பட்டு நிலம் இழந்து விரக்கியடைந்தமை.

2. கண்டி கிராமிய மட்டத்தில் சிறந்த சேவையினை வழங்கிவந்த கம்சபா (கிராமச்சபை) கோல்புறூக்கினால் நீக்கப்பட்டது. குறிப்பாக அச்சபை கிராமமட்டத்தில் நீதிவழங்கியது. கிராமிய உட்கட்டமைப்புப் பணிகளை நிவர்த்திசெய்தது. வரிகளை ஒழுங்காக முகாமைத்துவம் செய்தது. இச்சபையின் ஒழிப்பினால் கிராம மக்கள் விரக்தியடைந்தமை.

3. 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்தங்களின் கீழ் இராஜகாரிய முறை முற்றாக நீக்கப்பட்டதனால் பிரித்தானியர் நன்மையடைந்தனர். கண்டி மக்களின் கிராமிய நீர்ப்பாசன அபிவிருத்தித் தடையேற்பட்டு மக்கள் விரக்தியடைந்தனர்.
4. மேலும் இச்சீர்திருத்தங்களின் கீழ் இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டபோது கண்டி எல்லைப் பிரதேச விவசாயிகளின் நலன்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள் விரக்தியடைந்தார்கள்.
5. இப்புரட்சி **"விவசாயிகளின்"** புரட்சியாக அடையாளப்படுத்தப்படுகிறது.

07. (i) A - 1833 / கோல்புறூக் கமறன் சீர்திருத்தம்
B - 1931 / டொனமூர் யாப்பு
C - 1948 / சோல்பரி யாப்பு

(ii) அரச காரியதரிசிகளின் கீழிருந்த துறைகள் - 02

1. சட்டத்துறை / நீதித்துறை / பாதுகாப்புத்துறை
2. நிதித்துறை / வெளிநாட்டுத்துறை

இலங்கை அமைச்சர்களின் கீழிருந்த துறைகள் - 02

1. காணி விவசாயம் / உள்ளூராட்சி / தொழில், கைத்தொழில்
2. உள்நாட்டு அலுவல்கள் / கல்வி / போக்குவரத்து, பொதுவேலை

(iii) 1. மத்தியதர வர்க்கம் தோற்றம் பெற்றமை.

- இவர்கள் பிரித்தானிய காலணித்துவ கல்வி முறையின் ஊடாக தோற்றம் பெற்றனர்.
- இவர்கள் மேற்கத்திய கல்விகற்ற செல்வந்த வர்க்கமாக சமூகத்தில் புகழ் பெற்றனர்.
- இவர்கள் சமய, மதுவிடுதலை, அரசியல் சீர்திருத்தம் ஆகிய போராட்டங்களில் மக்களைத் தயார்படுத்தினர்.
- தேசிய விடுதலை இயக்கத்திற்கும், தொழிலாளர் உரிமை பெறும் இயக்கத்திற்கும் தலைமைத்துவம் வழங்கினார்.

2. மேலைத்தேய கலாசார ஊடுருவல் காரணமாக சுதேச கலாசாரப் பாரம்பரியம் சீரழிவுக்குட்பட்டது.

3. நாடெங்கும் சாராயத்தவறணைகள் திறக்கப்பட்டதனால் மதுப்பாவனை நாடெங்கும் பரவியதால் நாட்டில் வறுமை மற்றும் கலாசாரச் சீரழிவுகள் உருவானது.

www.ikeduk

(iv) இந்நாட்டில் நெற்பயிர்ச்செய்கையை முன்னேற்றுவதில் பிரித்தானிய ஆட்சியின் இறுதிக்காலத்தில் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் (1931 - 1947) சுதேச மந்திரிகளில் ஒருவரான டீ.எஸ். சேனநாயக்க அவர்களிடம் காணி விவசாய அமைச்சு வழங்கப்பட்டது. அவ்வமைச்சிக்கு பிரித்தானிய அரசு நிதியையும் வழங்கியதால் இலங்கையில் நெற் பயிர்ச்செய்கையை முன்னேற்றுவதில் கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

1. இலங்கையின் உலர்வலயத்தில் பலநோக்கம் கொண்ட விவசாய குடியேற்றங்கள் நிறுவப்பட்டன.
   உதாரணம் :
   - நாச்சதுவாக் குடியேற்றம்
   - மின்னேரிக் குடியேற்றம்
   - மினிப்பேக் குடியேற்றம்
   - பெரகம குடியேற்றம்
   - கணதரக் குடியேற்றம்
   - காகமக் குடியேற்றம்
   - உன்னிச்சைக் குடியேற்றம்
   - ரிதிபெத்திக்கால்வாய் குடியேற்றம்
   - பராக்கிரமபாகு சமுத்திரக் கால்வாய் குடியேற்றம்

2. இலங்கை அரசின் அனுசரணையுடன் உலர்வலயத்தில் ஈரவலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு நிலங்கள், வீட்டு வசதி, பண உதவி வழங்கப்பட்டது. அம்மக்களின் அடிப்படைத் தேவை உள்ளிட்ட சேமநல வசதிகளையும் அரசு வழங்கியதால் டொனமூர் காலப்பகுதியில் நெற்செய்கை முன்னேற்றமடைந்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் மேலும் நெற்செய்கை முன்னேற்றமடைந்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் மேலும் நெற்செய்கை முன்னேற்றமடைந்தது.

பகுதி - III

08. (i) A - நெசவுக் கைத்தொழில்
B - நிலக்கரிக் கைத்தொழில்
C - இரும்புக் கைத்தொழில்

(ii) 1. உலகம் முழுவதும் சனத்தொகை துரித வளர்ச்சியை அடைந்தமையால் பொருள்களுக்கான கேள்வி அதிகரித்தமை.
2. ஐரோப்பாவில் போக்குவரத்துத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி
3. பிரான்சிலும், ஜேர்மனியிலும் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டமை.
4. ஐரோப்பாவில் கம்பனி உடைக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டமை.
5. ஐரோப்பாவில் வரிகள் நீக்கப்பட்டதால் எளிதாக மூலப்பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை.

(iii) 1. பெருந்தெருக்களை அமைக்கும் முறையொன்று கண்டுபிடிக்கப்பட்டதும் பண்டங்களையும், பயணிகளையும் சுமந்து வாகனங்கள் வேகமாகவும் வசதியாகவும் பயணம் செய்யக் கூடியதாக இருந்தது.
   உதாரணம் :
   மெக்கடம் முறை - கி.பி. 1811 - ஜோன்மெக்கடம் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
2. புகையிரத என்ஜினைக் கண்டுபிடித்ததன் மூலம் போக்குவரத்துத்துறையில் புரட்சி ஏற்பட்டது. கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள், மூலப்பொருட்கள் விரைவாகக் கொண்டு செல்லப்பட்டது. புகையிரதங்கள் குறைந்த நேரத்தில் பெருந்தொகையான பொருட்களை ஒரே தடவையில் கொண்டுசெல்லக்கூடியதாக இருந்தமையால் போக்குவரத்துச் செலவு குறைந்தது.
   உதாரணம் :
   கி.பி. 1814 இல் **ஜோர்ஜ் ஸ்டீவன்சன்** நீராவி புகையிரத எஞ்ஜினைக் கண்டுபிடித்தார்.
3. இதைத்தொடர்ந்து புகைக்கப்பல் கண்டுபிடிக்கப்பட்டதால் போக்குவரத்துத்துறை மேலும் வளர்ச்சியுற்றது.
   உதாரணம் :
   1885 இல் ஜேர்மனியர் **டெம்பர்** மோட்டார் காரைக் கண்டுபிடித்தார்.

www.ikeda.lk

4. இதைத்தொடர்ந்து விமானம் கண்டுபிடிக்கப்பட்டதால் மேலும் போக்குவரத்துத்துறை வளர்ச்சியுற்றது.
உதாரணம் :
1903 இல் அமெரிக்க **ரைட் சகோதரர்களால்** ஆகாய விமானம் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு கைத்தொழில் புரட்சியின் விளைவாக இங்கிலாந்துப் போக்குவரத்துத்துறையில் நிலம், நீர், ஆகாயம் ஆகிய மார்க்கங்களின் பாரிய போக்குவரத்துப் புரட்சியேற்பட்டது.

(iv) (a) அரசியல்துறை :

1. ஐரோப்பாவில் தாராண்மைவாதக் கோட்பாடு தோற்றம்பெற்றது. இக்கோட்பாடு ஆரம்ப காலத்தில் **தனிமனித சுதந்திரத்தை வலியுறுத்தியது.** அரசு தனியாரின் சுதந்திரச் செயற்பாட்டில் தலையிடக்கூடாது. அரசு ஒரு பொலிஸ் அரசாகத் தொழிப்படவேண்டும். சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு, உத்தரவாதம் மட்டும் வழங்கவேண்டும். இக்கோட்பாடுதான் **"அடம்ஸ்மித்தின் தலையிடாக் கோட்பாடாகும்."**

2. ஐரோப்பாவில் ஆரம்பத்தில் குடியேற்றவாதக் கோட்பாடும் கைத்தொழில் புரட்சியின் பின்னர் அது **நவ குடியேற்றக்** கோட்பாடாக மாற்றமடைந்தமை.
குடியேற்றவாதம் என்பது குறைந்த விலைக்கு மூலப்பொருட்களைப்பெற்று கூடிய விலைக்கு முடிவுப்பொருட்களை விற்பனை செய்வதாகும். இதன் காரணமாக குடியேற்றங்களை விஸ்தரிக்கும் போட்டி நாடுகளிடையே ஏற்பட்டு இறுதியில் அப்போட்டி முதலாம் உலகமகா யுத்தமாக வெடித்தது.

(b) பொருளாதாரத்துறை :

1. முதலாளித்துவ பொருளாதாரம் உலகம் முழுவதும் பரவியது.
கைத்தொழிற்சாலைகளின் பெருக்கத்தினால் பணம் படைத்த முதலாளித்துவ வர்க்கம் தோன்றியது. இலாபநோக்கத்தை மட்டும் நோக்கமாகக் கொண்ட உற்பத்தியில் ஈடுபட்டு வர்த்தக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியது. இச்செயற்பாடு காலப்போக்கில் முதலாளித்துவ பொருளாதாரமாக உலகத்தில் பரவியது
2. காலப்போக்கில் முதலாளிகள் ஒன்றிணைந்து இலாபம் ஈட்டும் நோக்குடன் ஒன்றிணைந்து தனித்தனியாக கூட்டு வர்த்தகக் கம்பனிகளை உருவாக்கி உலகம் பூராகவும் தமது வர்த்தகத்தை வியாபித்தனர்.
உதாரணம் :
- ஆங்கில கிழக்கு இந்திய வர்த்தக கம்பனி
- டச்சு கிழக்கு இந்திய வர்த்தக கம்பனி
- பிரான்சிய கிழக்கு இந்திய வர்த்தக கம்பனி

3. 19 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் பல்தேசியக் கம்பனிகள் உலகம் முழுவதும் தோன்றியது. இக்கம்பனிகள் வர்த்தகத்துடன் நிதி மற்றும் வங்கி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன.

09. (i) A - ஒட்டோவன் பிஸ்மார்க்
B - வேல்செயிஸ் உடன்படிக்கை / 1919
C - வைமார் அரசு

(ii) A - அல்சேயிஸ் - லோரன்ஸ் பிரதேசம்
B - சர்வதேச சங்கம் / LEEK OF NATION / 1919
C - அமெரிக்காவின் பேள் துறைமுகம் ஜப்பான் நிர்மூலமாக்கியமை.
D - 1945 ஆகஸ்ட் 6 ஆம் திகதி அமெரிக்க போர் விமானம் B 29 எனோலாகே "சின்னப்பையன்" என்ற பெயர் கொண்ட அணுக்குண்டை ஹிரோஸிமா நகரம் மீது வீசியமை.
1945 ஆகஸ்ட் 9 ஆம் திகதி நாகசாகி நகர் மீது இரண்டாவது அணுகுண்டு "பாற்மானை" வீசியமை.

(iii) 1. மனித வரலாற்றில் இதுவரை நிகழ்ந்த யுத்தங்களில் மிகவும் கொடூரமான யுத்தம் இரண்டாம் உலகமகா யுத்தமாகும். அதிகளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இறந்தவர்களின் எண்ணிக்கை 50 மில்லியனை விட அதிகமாகும். *(இதில் 20 மில்லியன் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள்)*

www.kegdu.lk

2. பௌதீக வளங்கள் அழிந்தன. ஹிரோஷீமா, நாகசாகி ஆகிய நகரங்கள் அணுகுண்டால் அழிவுற்றது. மேலும் பல ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்கள் அழிவுற்றது. (பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மன்)
3. உலக வல்லரசுகளாக அமெரிக்க ஐக்கிய நாடும் (USA) சோவியத் ரஷ்யாவும் (USSR) எழுச்சியுற்றன.
4. உலகம் முதலாளித்துவ அணியென்றும், சோசலிச அணியென்றும் பிளவுபட்டன.
5. மேற்கு ஐரோப்பிய நாடுகள் கூட்டாக இணைத்தல்.
6. ஐரோப்பியருக்கு சொந்தமான வெளிநாட்டுக் குடியேற்றங்கள் அவர்களது கைகளைவிட்டு நழுவியது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் பல சுதந்திரம் பெறல். உதாரணம் : இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, பர்மா.
7. உலக சமாதானத்தைக் காக்கும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்டது.
8. பிரித்தானிய, பிரான்ஸ் தங்கள் உலக வல்லரசுகள் என்ற அந்தஸ்துக்களை இழந்தன.
9. ஜேர்மனி இரண்டாகக் கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி எனப் பிரிந்தது.

(iv) 1. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவின் கையிலிருந்த உலக தலைமைத்துவம் ஐக்கிய அமெரிக்காவிடம் சென்றார். அதற்கு எதிரான சக்தியாக ரஷ்யா உருவானது.
2. இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர் அமெரிக்கா - ரஷ்யா என்ற வல்லரசு முகாங்கள் உருவானது.
3. இரு நாடுகளினதும் இராணுவப் பொருளாதார தொழில்நுட்ப வளர்ச்சியும், கொள்கைப் பூசல்களும் அதிகாரத்திற்கான போராட்டங்களும் பணிப்போராக (கெடுபிடி யுத்தம் / ஆயுதமற்ற கொள்கைப் போர் / (Cold War) மாறின.
4. இதனால் உலகம் ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா தலைமையில் இரு துருவங்களாகப் பிளவுபட்டது. உதாரணம் :
   - ஐக்கிய அமெரிக்கா எதிர் சோவியத் ரஷ்யா
   - முதலாளித்துவ முகாம் எதிர் சோசலிச முகாம்
   - நேட்டோ இராணுவ எதிர் வார்சோ இராணுவ அமைப்பு NATO - 1949
     அமைப்பு WARSO - 1955
   - CIA என்ற மத்திய உணவுச்சேவை எதிர் KGB என்ற உணவுச்சேவை உருவாக்கம்.

தொகுப்பு
PTM.MAHROOF, ISA, ZONAL EDUCATION OFFICE , KALMUNAI
வழிகாட்டல் மற்றும் மேலதிக தகவல் ***NIE*** ஆசிரியர் கைநூல்
நன்றி ***NIE*** நிறுவனத்திற்கு

இச் செயற்திட்டத்திற்கு ஆலோசனையும் வழிகாட்டலும்
வலயக் கல்வி அலுவலகம் கல்முனை,
மாகாண கல்வித் திணைக்களம், திருகோணமலை

www.ikeou.lk